257

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை வெளிவரும்

Edito...
Publi... Lourduswami, B.A., L.T.
R. ... ning School, Trichinopoly.

JL
ஊ211, M11PP
1N45·36·4
189997

கோ... ஒக்டோபர் 1945 மலர் 4

R. C. போதனாமுறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 36] 15 ஒக்டோபர் 1945 [மலர் 4

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலைத் தினக்கொண்டாட்டம்!

23—10—45 முதல் 28—10—45 வரை: அழைப்பு!!

23—10—45 செவ்வாய்க்கிழமையன்று நம் பாடசாலை கல்விக் கண்காட்சி காலை 11 மணிக்குத் திறக்கப்படும்.

24—10—45 புதன்கிழமை காலை 8 மணிக்கு பந்தய விளையாட்டுகள் (Sports) நடைபெறும்.

25—10—45 வியாழன் மாலை 6-30 மணிக்கு பரிசு அளித்தல், (Prize Distribution) நாடகம் (Dramatic Performance) இவ்விழாக்கள் நடைபெறும்.

[ஷை வைபவங்கள் இம்மாதம் 16-ம் தேதியிலிருந்து தொடங்கும் என்ற அறிக்கையை மாற்றி 23—10—'45 முதல் ஆரம்பமாகும் என்று இதன்மூலம் நம் நேயர்கள் அறிந்துகொள்வார்களாக.]

நம் பழய மாணவர்களும் ஏனைய நம் "பூங்கொத்து" நேயர்களும் ஷை கொண்டாட்டத்திற்கு வந்து ஷை வைபவங்களைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். விசேஷமாய், ஷை கல்விக்கண்காட்சியைக் கண்டு களித்தும் ஏற்ற காட்சிப் பொருட்களை (Exhibits) முன்னதாகவே அனுப்பிவைத்தும் ஷை விழாவைச் சிறப்பிப்பார்களாக! அனைவரும் வருக! வந்து களிப்பெய்துக!! சிறந்த வேலைப்பாடுள்ளவற்றிற்குப் பரிசுகள் உண்டு!!!

T. S. L. C. பரீட்சை 1946.—இப்பரீட்சை 1946-ம் வருட மார்ச்சு-மீ 11-ம் தேதியிலிருந்து தொடங்கி நடைபெறும். பரீட்சை கால அட்டவணை முதலியன பின்னால் இதில் பிரசுரிக்கப்படும்.

சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette, Part I—B. dated September 25, 1945— Page 343.]

செகண்டரி கிரேடு—ப்ரைவேட் மாணவர்கள் அறிக்கை:— புதுத்திட்டத்தின்படி (Revised Scheme) பரீட்சை எழுதித் தேறியுள்ள எலிமெண்டரி ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ப்ரைவேட்டாக

ஸெக்கண்டரி கிரேடு பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டிருப்பதைப் போல், பழையதிட்டத்தின்படி (Old Scheme) பரீட்சை தேறியுள்ள ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களும் ஸெக்கண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். அடுத்த 1946-ம் ௵ மார்ச்சு மாதத்தில் நடைபெறும் T. S. L. C. பரீட்சைக்கே அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், இவ்வாறு ப்ரைவேட்டாக ஸெக்கண்டரி கிரேடுக்குப் பரீட்சை எழுதுபவர்கள் அனைவரும் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்கவேண்டும்.

(1) ஷை ஹையர் கிரேடு ஆசிரியர்கள். மெட்ரிகுலேஷன் பரீட்சையோ, அல்லது, Eligible for College Course—காலேஜ் படிப்புக்கு லாயக்குள்ள பரீட்சையோ தேறியிருக்கவேண்டும்.

(2) ஹையர் கிரேடு பரீட்சை தேறியபிறகு குறைந்தபட்சம் ஐந்து வருடங்களாவது ஆசிரியராக வேலைபார்த்திருக்கவேண்டியது.

ஷை பரீட்சை எழுத விரும்புகிறவர்கள் தங்கள் அப்ளிகேஷனை, அந்தந்த ஜில்லா (D. E. O.) கல்வி அதிகாரிகள் மூலமாய்த்தான் அனுப்பவேண்டும்.

போதனாமுறையும் பவணந்தி முனி

(M. A. S. Tamil Pandit)

(கொத்து 36, மலர் 3, பக்கம் 35-ன் தொடர்

ஆசிரியராவார் பண்பு

ஆசிரியத்தொழிலை மேற்கொள்ள விரும்புவார் எத் தகுதியுடையராதல் வேண்டும் என்பதை நன்னூலாசிரியர் கூறுமாறு :—

குலனருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியலறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரியன்னே.

அஃதாவது உயர்குடிப் பிறப்பும், அருளும், கடவுள் வழிபாடும் ஆகிய மூன்றனுலும் மிகவுயர்ந்திருத்தல் வேண்டும். பற்பல கலைகளையும் ஐயம் திரிபு அற உணர்ந்திருத்தல் வேண்டும். உணர்ந்தவற்றை மாணவர் எளிதில் உணர்ந்து கோடற்குரிய வகையில் எளிதாய்ப் போதித்தற்குரிய போதனாசக்தி யுடையராதல்வேண்டும். புவியும்,

28 OCT 1945

மலையும், நிறைகோலும் பூவும்போன்ற தன்மையுடையராதல்வேண்டும். உலகியலறிவும் உயர்ந்த குணமும் பிறவும் உடையராதல்வேண்டும். இன்னோரன்ன தன்மையுடையாரே ஆசிரியராவார் என்பது. இவற்றுள் குலனாவது ஜாதியுயர்வு தாழ்வுபற்றியதன்று. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும் கற்றோர் உயர்ந்தோர் என்னும் ஆன்றோர் கொள்கைக்கும் ஓர் திருத்தம் கூறுகின்றார் நன்னூலார். தன்னிலே ஒருவர் எவ்வளவு உயர்ந்திருப்பினும் மரபுநிலை குறையுமேல் ஒரோ வழி அவர் அம்மரபு காரணமாக அவர் குணம் மாறுபடவும் கூடும் என்பதை உணர்ந்தே குணமாறுபாடுடையாரிடம் கலைபெறும் மாணவர்க்கு அவர் குணங்களும் படிவது இயற்கையாதலால் ஒரு குடம் பாலை ஒரு துளி விடம் பயனற்றதாக்குதலோடு உண்பாருயிர்க்கு ஊற்றினையும் விளைத்துவிடுமாதலால், அச்சிறு குற்றந்தானும் இளமைப் பழக்கத்தால் உண்டாதலானும் "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில்," என்று பழமொழியுண்மையானும் அவ்விடையூற்றையகற்றியொழித்தற்காகவே அதனை முதற்கண்வைத்து உயர்குடிப் பிறப்புடையாரே ஆசிரியர் பயிற்சிக்கு ஏற்றவர் என்றார். காஞ்சிரம் வித்தில் இருந்து கற்பகக் கன்று தோன்றாது என்ற கொள்கை அவர் கொள்கை போலும். (தொடரும்.)

---

189 189997

பாடக் குறிப்பு

[S. Irudayam]

வகுப்பு: IV. பாடம்: பூகோளம்.

நோக்கம்: மண்வகைகளையும், பயிர்வகைகளையும் பற்றிய அறிவை உண்டாக்குதல்.

உபகரணம்: வண்டல், செம்மண், கரிசல், பழுப்புமண், கெட்டி இல்லாத மண் முதலிய மண் வகைகளும், சோளப்பயிர், பருத்தி, வேர்க்கடலை, நெல், ரோஜா, கொண்டைக்கடலை முதலிய காய்கறிச் செடிகளும்.

பீடிகை: உபகரணங்களைக் காட்டி, ஒவ்வொன்றைப்பற்றிச் சிறிது சம்பாஷிக்க. நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும்போதும், சில சமயங்களில் உலாவச்சென்றபொழுதும், இப்பொழுது நாம் சம்பாஷித்த மண், பயிர்கள் வகைகளைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? எம்மண்ணில் எவ்வகைப் பயிர்களைப் பயிர் செய்யப்படுகிறதென்று நன்கு ஆராய்ந்து பார்ப்போம் என நோக்கத்தைக் கூறவும்.

விஷயமும், முறையும்: (வண்டல் மண்ணை முதலில் காட்டுதல்). வண்டல்மண் ஆற்றங்கரையோரங்களில் அதிகமாக இருக்கும். மலைகளிலிருந்து உற்பத்தியாகி வரும் ஆறானது பாறைகளைப் பொடியாக்கிக் கொண்டு வருகிறது; கடைசியில் அது வண்டல்மண்ணாகிறது. இம்மண்ணில் நெல், கரும்பு, வாழை முதலியவை பயிர்செய்யப்படுகிறது. நன்செய் நிலங்களில் வண்டல் கலந்த களிமண் இருப்பதால் நெல் நன்றாக விளைகிறது. தண்ணீரும் அதிகம் தேவை.

செம்மண்: (ஈரச்செம்மண்ணையும், காய்ந்த செம்மண்ணையும் காட்டுதல்) இது ஒரு சிவப்பு நிறமான களிமண். இவை பிசுக்குத் தன்மையுடையது. இம்மண்ணில் துவரை, மிளகாய், ரோஜா, காய்கறிச் செடி முதலிய விளைபொருள்கள் நன்கு விளையும்.

பழுப்புமண்: (இதைக் காட்டி) இம்மண் களிமண்ணும் சுண்ணாம்பும் கலந்தது. வண்டல் மண்ணைப்போல் அவ்வளவு செழிப்பானதல்ல. இம்மண்ணில் விளையும் விளைபொருள்கள் எள், கொள்ளு, கேழ்வரகு, சோளம் முதலிய விளைபொருள்கள் நன்றாக வளர்ந்து பயனைத்தரும்.

கரிசல்மண்: (கரிசல் மண்ணைக் காட்டுதல்) இம்மண் கரிய நிறமுள்ளது. இது பிசுக்குத்தன்மை உள்ளது. இம்மண்ணில் பருத்தி, கொண்டைக்கடலை, கொத்தமல்லி என்னும் விளைபொருள்கள் விளையும். (கேள்விகள் மூலம் விடை வருவிக்க.)

கெட்டி இல்லாத மண்: (இதையும் காட்டுக) இம்மண், மண்ணும், மணலும் கலந்தது. இதன் முக்கிய விளைபொருள் வேர்க்கடலை.

[குறிப்பு]: மண் வகைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு, வேற்றுமைப்படுத்தி, கேள்விகள் மூலம் விஷயம் வரவழைக்கவும்.

அப்பியாசம்: கீழே கொடுக்கப்பட்ட மண் வகைகளுக்குப் பொருத்தமான பயிர் வகைகளை எடுத்து எழுதச்செய்யவும்.

வேர்க்கடலை	வண்டல்மண்
பருத்தி	செம்மண்
நெல்	கெட்டியில்லாத மண்
ரோஜா	கரிசல்

(1) ரோஜா, மல்லிகை எந்த நிலத்தில் செழிப்பாக வளரும்?

(2) வாழைக்கும் கரும்புக்கும் முறையே ஏற்ற நிலம் யாது?

(3) கரிசல்மண், செம்மண் இவைகளின் தன்மை என்ன?

(4) வேர்க்கடலை பயிர்செய்வதற்கு ஏற்ற நிலம் யாவை?

189927

கிராமவாசிகளின் ஏற்றப்பாட்டு

[M. Kulandaisamy]

கிராமங்களில் மக்கள் விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் சாகுபடி செய்த பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்க வேண்டுமல்லவா? அதற்காக அவர்கள் ஏற்றம் வைத்துத் தண்ணீரைக் கிணற்றிலிருந்து மேலே கொண்டுவந்து பயிர்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். அதற்குத் தகரத்தினாலும் தோலாலும் செய்யப்பட்ட ஓர் அளவுள்ள கருவியை உபயோகிக்கிறார்கள். அக்கருவியினால் ஓர் தடவை கிணற்றில் தண்ணீரை முகர்ந்து மேலே கொண்டு வந்து ஊற்றுவதற்கு ஒரு சால் அல்லது ஒரு பறி என்று சொல்லுவார்கள். சாதாரணமாக ஒரு காணிக்கு 1000 பறி இறைக்க வேணுமல்லவா? அப்போது களைப்பு ஏற்படாமல் இருப்பதற்குச் சில பாட்டுகளை இனிமையாகப் பாடிக் கொண்டுவருகிறார்கள். அவைகளுக்கு "ஏற்றப்பாட்டு" என்று பெயர். அவர்கள் 100 பறி இறைக்கவேணுமானால் அதை 5 பாகமாகப் பிரித்துவிடுவார்கள். ஒரு பாகத்திற்கு ஒரு பதியம் என்று பெயர். 1 பதியத்திற்கு 20 சால் கணக்காகும். (சில இடங்களில் 1 பதியம் 16 பறியாகவும், 30 பறியாகவும் 60 பறியாகவும் கணக்கிடுகிறார்கள்.) அவைகளில் இப்பொழுது முதல் பதியத்தை இங்கே குறிப்பிடுகிறேன். இம்முதல் பதியத்தில் வியாபாரத்திற்குச்சென்ற புருஷனின் பிரிவாற்றுமையால் கற்புடைய மங்கை ஒருத்தி தன் குறையை கீழ்க்கண்டபடி தெரிவிக்கிறாள்:—

மயணேரியா ஒன்று, மயணேரியா இரண்டு,
மயணேரியா மூன்று, மயணேரியா நான்கு,
மயணேரியா ஐந்து, மயணேரியா ஆறு,
மயணேரியா ஏழு, மயணேரியா எட்டு.
மாங்காய் பொதியேற, (என் கணவன்) மதுரைக்கே போனாரே,
மாங்காய் விலையாச்சா, மடக்கிவர நாளாச்சா,
தேங்காய் பொதியேற, தென்மதுரை போனாரே,
தேங்காய் விலையாச்சா, திரும்பிவர நாளாச்சா,
அன்பான நாயகரே, அவசரமாய் சென்றீரே,
எப்போ வருவீரோ, என்குறையை தீர்ப்பீரோ.

(தொடரும்)

பூகோளம் என்பதென்ன? அதைக்கற்பதெப்படி?

[G. V. Natarajan, H. M., Kolappalur]

"பூகோளம்" என்ன என்பதற்குப் பொதுவாக பூமியைப்பற்றிய விளக்கம் என்னலாம். இது ஒருவகையில் பொருந்துகிறது என்றாலும் இது போதுமா என்று பார்க்கும்போது, போதாது என்றுதான் சொல்லவேண்டும். இது பூமியைப்பற்றிய படிப்பு என்றாலும் பூமியில் மேல் உள்ள பாறைகளைப்பற்றி படிக்கும்பொழுது Geology வேலையாக இருக்கிறது. பூமியைச் சூழ்ந்துள்ள கடல்களைப்பற்றிப் படிப்போமென்றால் அது கடல்நூலில் காணவேண்டியிருக்கிறது. வானத்தில் உள்ள வெளியையும், நீரையும் பிரகோளங்களையும் படிப்பதோ எனில், இவை பௌதீகசாஸ்திரம் காலநிலைகளை அறியும் நூலிலும், வானநூலிலும் படிக்கிறோம். இது தரையில் உள்ள செடிகொடிகளையும், விலங்குகளையும் பற்றியது என்று தனித்துக் கூறுவதற்குமில்லை. ஏனென்றால் இவற்றை முறையே தாவர நூலிலும், விலங்கு நூலிலும் படிக்கவேண்டியிருக்கிறது. பூமியில் வாழும் மக்களையும் இது தனித்துப் பேசுவது அல்ல. ஏனெனில் மக்கள் எங்ஙனம் நாகரீகத்தில் வளர்ந்து ஒத்து ஒருமித்து வாழ்கின்றனர் என்பதை சமுதாய வளர்ச்சி நூல்களில் படிக்கிறோம்.

எனினும் பூகோளம் இவையனைத்தையும் கவிந்துகொண்டிருக்கிறது. இவை அனைத்திலும் மனிதப் பொருத்த (human aspect) இயல்புகளைப் பேசும் பகுதிகளையே ஒரு பூகோள ஆசிரியன் முக்கியமாய் கவனிக்கவேண்டியிருக்கிறது. மனிதனைப்பாதிக்கும் பொருள்களும், அவன் செய்வனவும், அவனைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருள்களாலேயே இயக்கப் பெறுகின்றன. உதாரணமாக சீதோஷ்ண காலநிலை முக்கியமாய் பூகோளத்தைப் பாதிக்கின்றது. அதுவே பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய பயிர்பச்சைகளையும், செடிகொடிகளையும்பற்றி படிக்கும் பூகோளதனை நிர்ணயிக்கிறது. பின் அப்பிரதேசத்தில் உள்ள கைத்தொழில்களையும் நிர்ணயிக்கின்றது. எனவே எந்த விஞ்ஞானக்கலை பூகோளத்திற்கு உதவினாலும் நம்முடைய கவனம் எவ்வாறு இயற்கை நிலைகள் மனிதனைப் பாதிக்கின்றன, மனிதன் செயல்கள் எவ்வாறு அவனைச் சூழ்ந்துள்ளவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றன, மனிதனும் அதற்குப் பதிலாக எவ்வாறு அவற்றைப்பாதித்து பின் அவற்றை அடக்கி ஆளுகின்றான் என்பனபோன்ற உண்மைகளில் செலுத்தப்படவேண்டும். இதுவே பூகோளப் படிப்பின் அடிப்படையாகும். இங்ஙனம் படிப்பதையே உண்மையான பூகோளப் படிப்பென்று பல ஆசிரியர்களும் கருதுகின்றனர்.

சுருங்கக்கூறின் பூகோளத்தை இருபெரும் பிரிவுகளாக்கிப் படிக்கலாம். ஒன்று இயற்கை சம்பந்தமானது. மற்றொன்று மனித சம்பந்தமானது. முதல் பகுதியில் ஒரு நாட்டின் ஸ்திதியையும், இயற்கை அமைப்பையும், காலநிலையையும், தாவரவகையையும் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். இரண்டாவது பிரிவில் ஜனத்தொகையின் பரப்பு, தொழில், நகரங்கள், போக்குவரவுசாதனங்கள், சமூக அரசியல் வாழ்க்கை முதலியவைகள் ஆகிய இவைகளையும் படிக்கலாம். இவ்விரண்டும் சேர்ந்தே பூகோளநூல் முற்றுப்பெறுகிறது.

ஆனால் இம்முறையை அப்படியே மாறுதல் இன்றிப் பின்பற்ற வேண்டும் என்று இல்லை. சில பிரிவுகளில் சில இல்லாது இருக்கலாம் அல்லது முக்கியமில்லாது இருக்கலாம். அதனை இடத்திற்கேற்றவாறு அமைத்துக்கொள்ளவேண்டும். எந்தப் பொருளைப் படித்தாலும் அதன் இயல்பை நன்றாய் ஆராய்ந்து படிப்பதே முறையாம். அதாவது அதன் இலக்கணத்தை நன்றாய்ப் படிப்பதாம். அதுபோலவே தரைநூலுக்கும் இலக்கணம் உண்டு. அமெரிக்காவில் சமீபகாலத்திற்கு முன்வரை நிலவிவந்த இலக்கணம் பூகோளத்தை (physical geography, economical geography, historical geography) என்று பிரித்துப் படிப்பது. இன்னொரு முறை நிலத்தைப் பல நாடுகளாக (political division) பிரித்துப்படிப்பது. உதாரணமாக பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி. முதல் முறைக்குப் பெரிய எதிர்ப்பு இருக்கிறது. இம்முறையில் படிக்கும் மாணவர்களுக்கு நிலம் எத்தன்மையது என்றும், நிலத்தை ஏன் இயற்கைப் பிரிவாகப் பிரிக்கிறோம் என்ற தெளிவான அறிவு ஏற்படுவதில்லை. இரண்டாம் முறை நல்லது. ஆனாலும் அன்றாட வாழ்க்கை (geography of daily life)-யில் நடக்கும் நிகழ்ச்சியோடு பூகோளத்தைப் பொருத்திப் பார்க்காதுபோய்விடுகிறது. ஆதலால் இதோடு நின்றுவிடாமல் இவற்றைவிட மேம்பட்ட இயற்கைப்பிரிவு முறையையும் பொருத்திக் கொள்ளலாம்.

இயற்கைப்பிரிவுகளாக்கி (regional geography) பூகோளத்தைப் படிப்பது. நிலத்தின் ஒரு இயற்கைப்பிரிவு முதலில் அதன் (structure and relief) மேடுபள்ள அமைப்பிலிருந்து தொடங்கி அதிலிருந்து இயற்கை அமைப்பையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. மண்டை ஓடு கடினமாயும், முகத்தின் நடுவில் மூக்கு நீண்டும், உயர்ந்தும், கன்னங்கள் மெதுவாயும் ஆகி எல்லாம் சேர்ந்து முகமாகிய இயற்கையமைப்பு ஏற்படுகிறது. அதுபோலவே தரைநூலில் இயற்கையமைப்பு என்பது மேடுபள்ள ஆக்கங்கள் சேர்ந்து உண்டாயிருக்கிறது. உலகத்தின் மேற்பரப்பின் இயற்கையமைப்பு அதன் மேடுபள்ள அமைப்புகளில் பலகாலங்களில் ஏற்பட்ட மாறுதல்களி

னுலும், காலநிலைகளினுலும் ஏற்பட்டதாகும். (natural forces acted on this structure) இந்த அமைப்புகளைப்பற்றி முறையே விஞ்ஞான நிபுணர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றனர். பூமியின் ஆக்கத்தையும் அமைப்பையும் ஒரு விஞ்ஞானி கவனிக்கின்முர். அதில் வாழும் மக்களை எங்ஙனம் பாதிக்கின்றன என்று மற்றொரு விஞ்ஞானி ஆராய்கின்முர். நாம் ஒரு இயற்கைப்பிரிவின் அமைப்பைப் படிக்கும்போது கேவலம் அதில் உள்ள மலைவரிசைகள், சிகரங்கள், முதலியவற்றைப்பற்றி மட்டும் படிப்பதில்லை. பழைய முறையில் மலைகளின் எண்ணிக்கை வரிசைகள் சிகரங்கள் முதலியவற்றைப் படித்தார்கள். ஆனுல் இப்புது முறையில் மலைகளை அடுத்த உயர்ந்த மேட்டுப் பகுதிகள், தாழ்ந்த நிலங்கள் (low lands) சமவெளிகள் (plains), டெல்டா பிரதேசங்கள், மலைகள் ஏரிகள் என்று பொதுவாகப் பிரித்து இந்நில அமைப்புக்கள் மனிதனைபாதிக்கும் விதத்தில் படிக்கிரும். இவ்விடங்களிலுள்ள உணவுவேற்றுமை, விளைபொருள்கள், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் படிக்கவேண்டியிருக்கிறது. மேலேபார்த்த இயற்கை அமைப்பின்மேல் இடைவிடாத காலநிலையும், வான வெளியில் உள்ள ஈரமும் தாக்கிக்கொண்டேயிருக்கின்றன. இத்தாக்கல்கள் சூரியனது சூட்டினுலும், இயற்கை அமைப்பின் தன்மையாலும் பாதிக்கப்படுகின்றன. இதைப்பற்றி நாம் படிக்கும்போது மாணவர்களுக்கு அமுக்கு மண்டலம் (pressure belt), (wind system) இவற்றின் இயக்கம் உச்சிப்பொழுதில் சூரியனுடைய தலைக்கு நேராக நிற்கும் நிலையையும் பொருந்திருக்கிறதென்றும் அறிவிக்கவேண்டும். இயற்கைப்பிரிவுகளாகப் பிரித்துபடிக்கும் முறையில் காலநிலை,—சீதோஷ்ணம்தான் மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. உலகம் முழுவதும் மனிதனுடைய வாழ்க்கையைப்பாதித்திருக்கிறது. உணவு, உடை, வீடுகட்டும்முறை, கைத்தொழில் முதலியவை எல்லாம் இதனுலேயே உறுதிசெய்யப்படுகின்றன. அமுக்கும் சக்தியை (pressure) காற்ருேடு பொருத்திப்படிப்பது அவசியம். காற்ருனது அதிகமான அமுக்கும் சக்தியிலிருந்து (area of high pressure) காற்று அமுக்கம் குறைவாய் இருக்கும் இடங்களுக்கு அடிக்கின்றது. சூடு அதிகமுள்ள காற்று குளிர்காற்றைவிட இலேசாய் இருப்பதால், உஷ்ணப் பிரதேசங்கள் காற்றின் அமுக்கம் குறைவாய் இருக்கும் இடங்களாக இருக்கின்றன. இதுதான் கோடையில் இந்தியாவில் சூடு அதிகமாயுள்ள காலத்தில் பருவக்காற்றுகள் குளிர்ந்த கடல்களிலிருந்து நிலத்திற்கு அடிக்கின்றன.

மழைபெய்தலும் காற்ருேடு நெருங்கிய தொடர்புடையது. கடலில் இருந்து வரும் காற்று ஈரத்தையும், மழைத்துளிகளையும் மிகவும் அதிகமாய்க் கொண்டுவருகிறது. இதன் முக்கியமான உண்மை என்னவென்ருல் சூடான காற்றே குளிர்ந்த காற்றைவிட ஈரத்தை (moisture) அதிகமாகக் கொண்டுவருகிறது. இக்காற்று குளிர்ந்த

இடங்களுக்குப் போய் குளிர்ச்சியடைந்தால் மழையாகப் பெய்யும். மலைவரிசைகளும் மழைபெய்வதில் பங்கெடுத்துக் கொள்கின்றன என்பதை அறிவிக்கவேண்டும்.

உஷ்ணநிலையை உறுதிசெய்யும் மற்றொன்று உயரம் (altitude) இதன் கீழ் சூரியனை நோக்கி மேலே போகப்போக ஏன் குளிர்ச்சி அதிகமாயிருக்கிறது? நம்மைச் சுற்றியுள்ள காற்று ஏன் வெப்பமாக இருக்கிறது என்பனவற்றை மாணவர்கள் நன்குணரவேண்டும். பூமியின் மேற்பரப்பை சூரியனுடைய கதிர்கள் சூடாக்குவதே இதற்குக் காரணமென்று சுருக்கமாகக் கருதலாம். காலநிலையைப்பாதிக்கும் மற்றொன்று கடல் என்னலாம். இவ்விதப்படிப்பில் நமக்கு உதவக்கூடிய கருவிகளாகிய தர்மாமீட்டர், பாராமீட்டர், ரெயின்கேஜ் முதலியவைகளை ஆசிரியர்கள் உபயோகப்படுத்துவதற்கு அறிந்துகொள்வதோடு மாணவர்களையும் உற்றுநோக்கிக் காலநிலைகளை உணரும்படி பழக்கவேண்டும்.

விடுகதை விடைகள்

(கொத்து 36, மலர் 3, பக்கம் 39-ன் விடுகதைகள்)

விடை:—1. புளி. 2. கிளி. 3. நாக்கு. 4. நட்சத்திரங்கள். 5. தேன்கூடு. 6. போதனுவிஷயப் பூங்கொத்து.

ஷை விடையளித்தவர்கள்:—S. Mathalaimuthu, Palamaneri; M. Ramasamy, Elur; S. A. Sebastian, Kallagudi; N. Madia Gowder, Thaliatimund, Ooty K. Periayesiah, Chinnamanur.

யோசனைக் கணக்கு விடைகள்

(கொத்து 36, மலர் 3, பக்கம் 46-ன் யோசனைக் கணக்கு)

விடை:—4-50 A.M.-ல் புறப்பட்டால் **336** மைல்.

4-50 P.M.-ல் புறப்பட்டிருந்தால் **67$\frac{1}{5}$** மைல்.

ஷை விடையளித்தவர்கள்:—S. Varadarajan, Srirangam; Peter Tambi Raju, Kumbakonam; S. Johnson, Puthampatty, Omandur; K. Madia Gowder; R. S. Padmanaban; M. Ramasamy; S. Mathalaimuthu.

கேள்வி கேட்கும் முறைகள்

[T. S. G.]

(கொத்து 36, மலர் 3, பக்கம் 46-ன் தொடர்ச்சி)

II. குறிப்பாய் இருத்தல். சரியான ஒரே விடையை ஏற்கக் கூடிய கேள்வியே குறிப்பான கேள்வியாகும். அன்றியும் மேற்கூறிய வாறு தெளிவாயும் சுருக்கமாயும் இருத்தல் வேண்டும்.

1. "பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகவும் பெயர் பெற்ற இந்திய ராஜப்பிரதிநிதிகளில் ஒருவரைச் சொல்லு." 2. "தண்ணீரில் வாழும் ஜந்துக்களில் மிகவும் முக்கியமானது எது?" 3. "தோப்பிலோ, சோலையிலோ வெகு அழகாய்க் கூவும் பறவை எது?"

மேற்படி கேள்விகளுக்கு விடை, உபாத்தியாயர் தம் மனதில் எண்ணிக்கொண்டிருக்கும் விடைக்கு ஒத்துப்போகவேண்டுமாம். மாணுக்கனுல் உத்தேசமாகக் கூறப்பட்ட விடை ஒருக்கால் சரிபட்டுப் போய்விடலாம். அப்போது அம் மாணுக்கன் வெகுவாய் மெச்சப் படுகிருன்!

III. யோசனையை விருத்தி செய்தல். பிள்ளைகளின் ஆலோசிக்கும் திறமையை வளர்ப்பதற்கே நாம் கேள்விகளைப் போடுகிறோம். போடும் கேள்விகளில் விடையடங்கி யிருக்குமாயினும், அல்லது விடையைச் சுளுவாய்க் கண்டுபிடித்துவிடும்படியாக இருக்குமாயினும் அக்கேள்விகளால் பிரயோஜனமிராது.

உதாரணமாக:—

1. "குடிகளை அரசன் காக்கின்றபடியால் காவலன் என்றால் அர்த்தம் என்ன?"

2. "போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் மாதா மாதம் 4-ம் தேதிக்குமேல் போடப்படும் பணத்திற்கு அம்மாதத்திய வட்டி சேர்க்கப்படாததால் எதற்குள் பணம் போடவேண்டும்?"

3. "செடிகள் வளர்வதற்குச் சூரிய வெளிச்சம் அவசியம். எதற்கு அவசியம்? எது அவசியம்? ஏன் அவசியம்?

4. காவேரிநதி வண்டலை அடித்துக்கொண்டு வருகிறது; ஆகையால் நெற்பயிருக்கு என்ன தேவை?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடையளிக்கச் சாமர்த்தியமும் வேண்டுமோ? அக்கேள்விகள் பிள்ளைகளின் யோசனையைத் தூண்டக் கூடியனவா?

IV. கேள்விகள் கேள்வி ரூபமாகவும், முழு வாக்கியமாயும் இருத்தல் வேண்டும். உபாத்தியாயர் கேள்வியின் ஒரு பகுதியையும், பிள்ளைகள் விடையின் ஒரு பாகத்தையுமாகச்சொல்லி முடிக்கும் வழக்கம் நல்லதல்ல. பிள்ளைகளின் புத்தி வளர்ச்சிக்கு இது உதவாதது.

உதாரணமாக:—

1. உபா:—"பூனைக்கு முன்கால்களைவிடப் பின்கால்கள் ....பிள்ளைகள்:—நீளமாய் இருக்கும்."

2. உபா :—“ திரைகடலோடியும்...........பிள்ளைகள் :— திரவியம் தேடு.”

3. உபா :—“ சூரியன் காலை ஆறு மணிக்கு.........பிள்ளைகள் :— உதிக்கும்.”

V. ஒரே தடவையாக ரூபத்தை அடிக்கடி மாற்றுமல் கேள்வி கேட்டல்.

உதாரணமாக :—

1. “ உத்தராயணத்தில், அல்லது நிரக்ஷரேகைக்கு, வடக்கில் அதாவது 0 டிகிரிக்கு வடக்கில் சூரியன் இருக்கும்போது, வடக்கில் சூரியன் இருக்கும்போது, அதே காலத்தில் தென்னிந்தியாவில்— வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால் தெக்கணத்தில் உஷ்ண நிலை எப்படி இருக்கும் ? ”

2. “ வட இந்தியா நதிகளுக்கும்—கவனி என்ன—தென்னிந்தியா நதிகளுக்கும் —தெரிந்ததா—தூங்காதே—உள்ள வித்தியாசங்களை—எங்கே—பார்ப்போம்—சொல்லு.”

இவ்வாறுகக் கேள்விகளைப் புரட்டிப் புரட்டிக் கேட்பதும், அநாவசியமாய் எச்சரிக்கைகளைப் புகவிடுதலும், பிள்ளைகளின் கவனத்தைச் சிதறடிப்பதுடன், ஒழுங்காய் யோசிக்கும் தன்மைக்கும் இடையூறு ஏற்படுகிறது.

VI. ஒற்றையா ? இரட்டையா ? என்ற கேள்விகள் ; ஆம் ; இல்லை என்ற பதில் வரும் கேள்விகள் ; ஏமாற்றத்தைத் தரும் கேள்விகள்—இவற்றை விலக்கல். உதாரணமாக :—

1. “ வாங்கின விலையோடு லாபத்தைக் கூட்டவேண்டுமா ? கழிக்கவேண்டுமா ? ; நஷ்டத்தைக் கழிக்கவேண்டுமா ? ; கூட்ட வேண்டுமா ? விற்றவிலை கண்டுபிடிக்க ”—

2. “ இரும்பு—கெட்டியா ? இலேசா ? மிருதுவா ? கடினமா ? ” மேற்படி கேள்விகளைக் கேட்கவேண்டியிருந்தால் விடைக்குக் காரணம் கூறச்செய்யவேண்டும்.

3. மலையில் மழை அதிகம் பொழியுமல்லவா ?

4. உணவை மென்று தின்ன வேண்டுமா ?

5. பாம்பின் நாக்கு பிளவுபட்டிருக்கிறதா ?

இத்தகைய வினுக்களை போடும்படி நேரிட்டுவிட்டால் பிள்ளைகள் எந்த ஜாடையைக்கொண்டாவது சரியான பதில் அளித்துவிடக்கூடும். ஆதலால் உபாத்தியாயர் காரணம் கேட்காமல் அவர்களை வாளா விடுதல் கூடாது.

6. “ 24 பழங்களை ஆறு பேருக்குச் சமமாய்ப் பங்கிட்டால் தலைக்குக் கிடைப்பது 5 பழங்கள் தானே ? ”

7. “ பூனைக்குப் பகலில்தானே நன்றாய் கண் தெரியும் ”

8. "அக்பர் இந்துக்களை விரோதித்தவரல்லவா?"

இத்தகைய ஏமாற்றந்தரும் கேள்விகளால் அற்ப சந்தோஷ முண்டாவதைவிடப் பெரிய லாபம் என்ன சித்திக்குமோ?

III. கேள்வி கேட்கும் முறை

I. பொதுவாய்க் கேட்டுக் குறித்தல்:—கேட்கவேண்டிய கேள்வியை நன்கு யோசித்தபின் பிள்ளைகள் அனைவர்க்கும் பொதுவாய் அதைப் போடவேண்டும். அவர்கள் யோசித்துப் பதிலளிப்பதற்கான சொற்ப நேரம் கொடுத்தபின்னர் யாராவது ஒருவனைக் குறித்துக் கேட்கவேண்டும். ஒரு மாணவனை எழுந்திருக்கச் சொல்லி அவனைக் குறிப்பிட்டுக் கேட்பதால் மற்றப் பிள்ளைகள் நமக்கென்னவென்று கவனிக்காமல் இருக்கலாம்.

மேலும் பிள்ளைகள் வகுப்பில் உட்கார்ந்திருக்கும் வரிசைக் கிரமத்தில்—அடுத்தவன்—அடுத்தவன் என்று கேட்டுக்கொண்டே போவதைவிட அங்கொருவன் இங்கொருவனைக் கேட்டுவிடுவதால் எல்லோரும் விழிப்பாய் இருக்கப் பழகுவார்கள்.

II. அனைவரும் பயனுறுதல்:—கெட்டிக்காரன், மந்தன், கிட்ட விருப்பவன், எட்டி இருப்பவன், முன் இருந்தவன், பின் வந்தவன் முதலிய பலதிறத்தினர்களும் விடுபடாமல் கேள்விகள் கேட்கப்படவேண்டும். மந்தனை கவனிக்காது விடுதல் குற்றம். கெட்டிக்காரனை வாளா விடுதல் குறை.

III. உபாத்தியாயர் குறிப்பிட்ட ஓர் ஸ்தானத்திலிருந்து கேள்வி கேட்டலே முறை. பிள்ளைகளிடம் அடிக்கடி செல்லுவதும், வகுப்பில் உலாவிக்கொண்டு கேள்வி கேட்பதும் சரியன்று. பிள்ளைகளிடம் சென்று வரவேண்டியிருந்தால் தாராளமாய்ச் செய்யலாம். ஆனால் கேள்வி கேட்குமுன் தன்னிருப்பிடம் வந்துசேரவேண்டும். இது உபாத்தியாயருடைய பார்வை எல்லாப் பிள்ளைகளின்மேல் படவேண்டிய நியாயம் பற்றியேயாகும்.

18997

யோசனைக் கணக்கு

[R. S. Padmanaban]

30 ஆட்கள் ஒரு வாய்க்கால் வெட்ட அமர்ந்தனர். அதை அவர்கள் 8 நாட்களில் முடிப்பார்கள். ஆனால் வேலை ஆரம்பித்த சில நாட்களுக்குப்பின் 6 ஆட்கள் நீங்கினர். அதனால் வேலை 1 நாள் அதிகம் நீடித்து முடிந்தது. 6 பேர் நீங்கினது எப்பொழுது?

ஆசிரியரும் கலைகளும்!

[கோஹினூர்]

உலகமே கலை! கலையே உலகம்!! கலைகள் அபிவிருத்தி அடைந்ததால் மனிதன் ரயிலைப் பெற்ருன்; ரேடியோவைப் பெற்ருன்; சினிமாவைப் பெற்ருன்; ஆகாயவிமானத்தைப் பெற்ருன்; ரேடியத்தைப் பெற்ருன். எத்தனை நன்மைகள் இவைகளினுல்! ஆனுல் அதே கலையை அபிவிருத்தி செய்ததினுல் பறக்கும் குண்டு, ஆளில்லா விமானம், அணுகுண்டு, விஷவாயு முதலியவைகளும் விருத்திசெய்யப்பட்டு ஹிரோஷிமாவை அழித்ததோடு நில்லாமல் மனிதத்தன்மையையே அழித்துவிட்டது! மனிதன் கலைக்கே அடிமையாகிவிட்டான்! இது தவறு. கலையை மனிதன் தன் நாகரீகத்திற்குப் பணியவைக்கவேண்டும்! அப்பொழுதுதான் நானும் க்ஷேமமாய் வாழ்வேன், நீங்களும் க்ஷேமமாய் வாழ்வீர்கள்; உலகமே க்ஷேமமாக வாழும்! இப்படி கலை, கலை என்று சொல்லப்படும் அந்த "கலை" ஆசிரிய சமூகத்தில் எத்தனைதூரம் தாண்டவமாடுகிறது என பார்க்கலாம்!

உலகத்தில் எல்லாம் கலையே! ஜீவிப்பதுவும் ஒரு கலைதான். ஆசிரியர் பிள்ளைகளுக்குப் பாடம் போதிப்பதே ஒரு அரிய கலைதான்! நன்கு பக்குவப்படாத இளகிய இதயத்தை உலகத்தில் ஜீவிப்பதற்குத் தக்கதாய்ப் பண்படுத்திவைப்பது பெரிய கலையல்லவா? ஆம்! பிற்காலத்தில் பெரிய கலைஞனுகும் ஒருவன் ஒருவேளை என்னுடைய (ஆசிரியர்!) அசிரத்தையான போதனு கலையினுல் மங்கி மந்தமதியுள்ளவனுகலாம்! ஆதலால் பிள்ளைகள் எந்த எந்த விஷயங்களில் கவனம் செலுத்துகிருர்கள் என பார்த்து அவர்களை அந்த விஷயங்களிலேயே கொண்டுபோகவேண்டும். சிலர் சித்திரம் வரையப் பிரியப்படுவார்கள். சிலர் கதை எழுதுவதற்கான எழுத்து நடையைப் பெற்றிருப்பார்கள். சிலர் கவிதை இயற்ற திறமைகொண்டு இருப்பார்கள். ஆசிரியர் அவர்களைத் தட்டிக்கொடுத்து அந்தக்கலையில் மேம்பாடுள்ளவனுக ஆக்க பிரயாசைப்படவேண்டும். ஏனெனில் அவைகள் கலைகள்! அவர்கள் கலைஞர்கள்!!

திருடுவதும் கலை! பொய் சொல்வதும்!! பிள்ளைகளிற் சிலர் பென்ஸில், பேனு இவைகளை முயற்சியாகத் திருடுவார்கள். கலை என்று கூறிக்கொண்டு அதை விருத்தி செய்யக்கூடாது. எல்லாவற்றிலும் நன்மையுமுண்டு; தீமையுமுண்டு. அதேபோல்தான் கலையிலும். ஆனுல் நாம் நற்கலைகளையே அபிவிருத்தி செய்யவேண்டும். சரித்திர பாடத்தில் சிவாஜியைப்பற்றி போதித்துக்கொண்டிருக்கிரும். அச்சமயம் பிள்ளைகள் பற்பல எண்ணங்கொண்டு இருப்பார்கள். ஒரு சிலர் "சிவாஜி குதிரையில் போவதுபோல் படம் வரைந்தால் என்ன?" என நினைப்பார்கள். "அன்னியனுக்கு அடிமையாகாதே! உன் சுதந்தரத்தை நீ பெற்றுக்கொள்" என்னும் சிவாஜியின் வாக்கை ரஸித்துக்கொண்டு இருப்பார்கள். வேறு சிலர் மனதில் "சிவாஜி ஔரங்கஸீப்பிடம் போய் இருக்கக்கூடாது!" என்னும் ராஜ

தந்திர உணர்ச்சி தோன்றும். இவைகள் மாதிரி, கலைகளின் 'வித்தான' மன உணர்ச்சி எங்கே தோன்றுகிறது என பார்த்து அவைகளுக்கு 'உற்சாகம்' என்னும் நீரைப் பாய்ச்சவேண்டும்!

சிறுவர் போடும் மோசமான சித்திரங்களையும் "சுமார்" என்று சொன்னால் பிற்காலத்தில் அங்கே ஒருவராவது "ரவிவர்மா" ஆவது திண்ணம். நாம்தான் மோசமானதாக இருந்தால் மற்ற பிள்ளைகளிடம் அந்தப் படத்தைக்காட்டி சிரித்துச்சிரித்து அவனுடைய உற்சாகத்தைக் குறைத்துவிடுகிறோமே! சிவாஜி மகாராஜா ஆனதற்குக் காரணம் அவனது ஆசிரியர் என்று இன்றும் நாம் சரித்திரத்தில் படிக்கிறோமல்லவா? அங்கே அந்த ஆசிரியருக்குச் சரித்திரத்தில் இடம் கிடைத்தது. நமக்குச் சரித்திரத்தில் இடம் உண்டா?

ஆசிரியரும் ஒவ்வொரு கலையில் மேம்பாடுடையவராக வேண்டும். சிலர் சித்திரம் வரைவார்கள்; சிலர் கவிதை புனைவார்கள்; வேறுசிலர் தமிழ்நடையில் கீர்த்தி பெற்றிருப்பார்கள்; வேறுசிலர் பாடல்கள் பாடுவதில் தேர்ச்சியுற்றிருப்பார்கள். இன்னும் சிலர் விளையாட்டுகளிலும், ஓட்டங்களிலும் (Running, Long jump, High jump) பிரசித்திபெற்றிருப்பார்கள். அவர்கள் தங்கள் கலையுணர்ச்சியை அறையில் வைத்துக்கொண்டு ஆடாமல் அம்பலத்திற்கு கொண்டுவரவேண்டும் என்பது என் பேரவா! "எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்வதைவிட அறிவீனம் வேறு இல்லை. உள்ளத்தில் துடித்துகொண்டு இருக்கும் கலை வெள்ளத்தை உலகில் பாய்ச்சவேண்டும். நடிப்புக்கலையை T. K. S. சகோதரர்கள் விருத்தி செய்யவில்லையா? சினிமாக்கலையை "பாம்பே டாக்கீஸார்" (ஹிந்தி படங்கள் எடுப்பவர்கள்) விருத்திசெய்யவில்லையா? நாட்டியக்கலையை ஸ்ரீமதி லலிதாதேவி திருவல்லிக்கேணியில் வளர்க்கவில்லையா? இன்னும் சிற்பக்கலை, சித்திரக்கலை, முதலியனபோன்ற கலைகள் உலகத்தில் வளரவில்லையா? "நீங்கள் எந்தக் கலையில் மேம்பாடடையலாம்?" என ஆராய்ந்துபாருங்கள். ஏனெனில் உங்கள் பெயரும் சரித்திரத்தில் பொறிக்கப்படும்! பொறிக்கப்படவேண்டும்!!

சில ஆசிரியர்களுடைய பரம்பரைத் தொழில் தச்சு, கொல்லு முதலியவைகளாயிருக்கலாம். சில ஆசிரியர்களுக்கு இம்மாதிரி வேலைகள் தெரிந்தே இருக்கும். ஓய்வு நேரங்களில் ஆசிரியர் ஏதாவது ஒன்று செய்து பார்க்கவேண்டும். ஆசிரியர் ஓய்வு நேரத்தில் தச்சு வேலையோ, கொல்லு வேலையோ? தட்டார வேலையோ செய்வதை இழிவு எனக் கருதக்கூடாது. ஒரு புது ஜாமானை செய்து காட்டும் வரையிலும் உலகம் "பைத்தியக்காரன்" என்றுதான் நகைக்கும். செய்து காட்டிய பின்னரோ வாயை 'ஆ' என பிளக்கும்! பிள்ளைகள் முன்னேற வேண்டியதும் நம்மால்தான்! நாம் முன்னேற வேண்டியதும் நம்மால்தான்!! எனக்கு என் ஆசிரியர் எப்படிச் சிறிது எழுத்து வன்மையை அளித்தார்—அளிக்க உதவி செய்தார் என்பதை உங்க

ளுக்குச் சொல்லிவிடுகிறேன். நீங்களே பார்த்துக்கொள்ளுங்களேன் ...உதவி எப்படிச் செய்யவேண்டும் என்று!

புதிதாக எங்கள் பள்ளிக்கு 1939-ம் ஸு ஒரு ஆசிரியர் வந்தார். ஒரு B. A., L. T., தான்! ஆடம்பரமற்ற ஆடை! பாலர்களை வசப்படுத்தும் பேச்சு! ஆகஸ்டுமாதத்தில் ஒருநாள் அவர் "ஹிட்லரும், சேம்பர்லினும் சந்தித்தால் என்ன பேசிக்கொள்வார்கள்?" என்பதைப் பற்றி வியாசம் எழுதச் சொன்னார். நான் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். (அவர்தான் ஹெட்மாஸ்டர். ஆம்! அவர் பெயர்...

வியாசங்கள் எழுதினோம். நான் சரடுதிரித்து எழுதினேன். வியாசங்கள் எழுதி முடித்ததும் அவர் வாசித்துப்பார்த்தார். கடைசியில் "ஸாம்!" என்றார். அவரண்டை சென்றேன். தட்டிக் கொடுத்து "ஸபாஷ்!" என்றார். வியாசத்திற்கு! இதுவே எங்கள் முதல் சந்திப்பு! அடிக்கடி பின்பு என்னைக் கூப்பிடுவார்—வாதாடிக் கொண்டு இருப்போம். "கதை, கட்டுரை எழுத உனக்கு எழுத்து வன்மை இருக்கிறது" என்றார். அவர் மயக்கத்தில் பேசுகிறார் என நினைத்தேன். ஆம்! அது அன்பின் மயக்கம்தான்! கிறிஸ்மஸ் லீவிற்கு துறையூர் சென்றிருந்தேன் அங்கே ஒரு கடிதம் எழுதியிருந்தார். கடிதத்தில் அவர் என்னை உற்சாகப்படுத்தி ஒரு கதை, ஒரு கட்டுரை, ஒரு பாட்டு எழுதி வரச்சொல்லியிருந்தார். எழுதிக்கொண்டு போனேன். "அழகாக இருக்கிறது" என்றார் வாசித்துப் பார்க்காமலேயே!

ஆனந்தவிகடனில் "யானை தும்பிக்கை" என்று ஒரு பாலர் கதை போட்டி வெளியாகி இருந்தது. என்னை எழுதச் சொன்னார். எழுதினேன். போட்டியில் வெற்றி வேறொருவருக்குப் போய்விட்டது. "எழுத்தாளன் மனச்சோர்வு அடையக்கூடாது" என்றார். 1940-ம் வருஷம் மே-மாதம் வித்தியாதனத்தில் கடிதப்போட்டி ஒன்று வெளியானது. உற்சாகப்படுத்தினார் ஹெட்மாஸ்டர், எழுதினேன். வெற்றி கிடைத்தது. அதுவே முதல் வெற்றி! எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அதைவிட அவருக்குத்தான் அதிக ஆனந்தம்போலும்! தட்டிக்கொடுத்தார் என்னை!! அவருடைய ஆனந்தத் தட்டால் என் முதுகு வீங்கிவிட்டது!!! அதுமுதல் கட்டுரை, கதைகள் எழுத ஆரம்பித்தேன். வெற்றி பெற்றேன்! அதைவிட அதிகமாகத் தோல்வியும் பெற்றேன். கடவுள் என்னையும், உங்களையும் கலைஞுக்குவாராக! என் ஆசிரிருக்கு.........ஜே!

"தற்பெருமை படாதே" என்று எனக்குப் புத்திசொல்லும் ஆசிரியரே! வந்தனத்துடன் உங்கள் புத்தியை ஏற்றுக்கொள்கிறேன். நீங்களும் என் ஞாபகார்த்த வசனமாக இதை ஏற்றுக்கொள்ளுங்கள்! "உங்கள் இதயத்தில் மங்கி எரியும் எந்தக் கலைத் தீயையும் அணைத்துவிடாதீர்கள். அதைத் தூண்டிவிடுங்கள். உங்களுக்காக இல்லாவிட்டாலும் உலகத்திற்காகவாவது தூண்டிவிடுங்கள்!"

"அலெக்ஸாண்டர்"

ஓர் காவிய நாடகம்

[ஆசிரியர் J. S. X. Fernando]

திரை: 1. இடம்: கிறீஸ்.

அலக்:—யார், எவர் நமக்கிணே, பார்முழுதும் ஜெயித்திடில்?

துணைவீரன்:—பார் முழுதும் ஜெயித்திட பாரதம் குறுக்கிடும்.

அலக்:—பாரதம் ஜெயித்திடில் பார் முழுதும் நம்மதே. பாரதம் ஜெயித்திட போர்முறை வகுத்திடு.

துணைவீரன்:—வீரங்கொண்ட நாடது, போர் சிறந்த நாடது. யாரும் அஞ்ச, நமனும் அஞ்சப் போர் நடத்தும் நாடது.

மந்திரி:—தங்கமோடு தாளம் மணி தனம் புரளும் நாடு. கொங்கு மிக்க புனுகு ஏலம் குடியிருக்கும் நாடு. செங்கனிமா, வாழை பலா, செழிகழனி நாடு. அங்கு சென்று போர் புரிய ஆண்மையோடு செல்வோம்.

துணைவீரன்:—உறுதிகொண்டு செல்வோம்.

அலக்:—இறுதி கண்டு மீளுவோம்.
தக்கை கொட்டி, முரசு கொட்டி
மக்களெல்லாம் செல்வோம்.

சேனதிபதி:—ஈட்டி அம்பு கூட்டி சேர்த்து இமய நாடு செல்வோம்.

அலக்:—வேலும், வாளும், சூலம் கொண்டு நாலு நாளில் செல்வோம்.

திரை 2. இடம் பாரசீகம்

(பாரசீகம் தோற்றுவிட்டது, இந்தியாவில் படையெடுக்க வேண்டுமென்று அலக்ஸாண்டர் தன் படைகளை உற்சாகமூட்டுகிருர்.)

அலக்:—பாரசீகம் வீழ்ந்தது பாரதத்தை வீழ்த்திட வீரங்கொண்டெழுகவே, வெற்றிகண்ட சூரர்காள், பக்ஷமின்றி யாருமே பாரதத்தின் வாசலாம் தக்ஷசீலம் ஆளும் அம்பி தலைவணங்க செய்குவோம்.

(அம்பியின் தூதன் வந்து அடிபணிந்துவிடுகிருன் அலக்ஸாண்டர் முன்.)

தூதன்:—பார்முழுதும் வெற்றிகொள்ள பான்மைகொண்ட மன்னவ போர் புரிய எண்ணமே பாரில் எங்கட்கில்லை காண். அடிபணிந்து விடுகிருேம். முடி கலைந்துவிடுகிருேம். கொடிபணிந்து விடுகிருேம். குடிபணிந்துவிடுகிருேம்.

அலக்:—சொட்டுரத்தமின்றியே, கிட்டிவிட்ட வெற்றியே, இட்டுச் செல்வம் ஈழம் நோக்கி.

படைகள்:—...........எழுக எழுக எழுகவே.

அலக்:—சீலம் ஆற்றைத் தாண்டிவிட பாலம் இங்கு இல்லையே.

துணைவீரன் :—எனும் வழி செய்து நாம் இறங்கவேண்டும் எதிர்க் கரை.

திரை 3

இடம்: போரஸ் அரண்மனை.

போரஸ் தனது பரிவாரங்களுடன் இருக்கும்போது அலக்ஸாண்டரின் தூதுவன் வந்து தோன்றுகிறான்.

போரஸ் :—"யாரிவன், நீ வந்ததென்? கூறு." என்ன கூறுவான்.

ஒற்றர் :—போர்புரிய விருப்பமோ யார்வரினும் தோற்பர்காண்; சீர் மிகுந்த கிரேக்கவீரர் பார்முழுதும் வெல்லுவார். அடிபணிந்து தப்புவீர்! முடிவு செய்து சொல்லுக. கடிது சொல்லவேண்டும் யான், கருத்தை சொல்லியனுப்புவீர்.

போரஸ் :—(சிரித்துக்கொண்டு)

முடிவுகாண விரும்புறீர் முடிவு சொல்ல வேண்டுமோ அடிபணிந்து வாழ்வதா, அம்பி போன்ற பேடியா? பாரதத்தில் சாவதென்ற பான்மைகொண்ட வீரர்காள் போர் மறந்து நாடு செல்வீர் சீரழிய எண்ணமோ.

ஒற்றன் :—வலிமைகொண்ட் குதிரைவீரர் வருவதன் சொல்லுக புலியெனத்திரண்டு உன்னைபொருதி வெல்வம் உண்மையே.

புருஷோத் :—"பொருதி வெல்வதுண்மையேனும் போர்களத்து [மாளுவம்.

சுருதிகாக்கும் தெய்வமுண்டு, தொழுதிடோம் ஈதுண்மையே.

சேனாதிபதி :—மீளமாட்டீர் நிச்சயம் ஆளமாட்டீர் நிச்சயம்.

முனிவர்கள் :—வேள்விகாக்கும் நிச்சயம், கேள்விப்பட்ட [தில்லையோ

(ஒற்றன் போய் விடுகிறான்.)

திரை 4

(புருஷோத்தமன் படைகளுக்கு சொல்லுகிறான்)

புருஷோ :—ஆனைகள் திரள்கவே ஆயிரம் பல்லாயிரம் சேனைகள் திரள்கவே சித்தமாவோம் போருக்கே வேலும் வாளும் கண்டதும் கால்பதைத்து ஓடுவார்.

வீரன் ஒருவர் :—சூலம் ஒன்று போதுமே தோள்களை பிளக்கவே மந்திரி. சீலம் ஆற்றைக் கடந்திட பாலம் செய்யக்கருதுவார்.

புருஷோ :—ஆற்றினைக்கடந்திடாமல் ஏற்றவழி செய்குவோம்.

வீரர்கள் :—சீற்றமுடன் வீரர் நாங்கள் சென்று காவல் செய்குவோம்.

திரை 5

புருஷோத்மனிடம், எதிரிகள் மழை பெய்த ஓர் நாளில் ஆற்றில் கடந்து வந்ததை, தூதன் தெரிவிக்கிறான்.

வீரன் :—இக்கரைக்கு வந்துள்ளார் எதிரிகள் எழுகவே.

புருஷோ :—தக்கைகொட்டு, முரசுஆர்க்க, சங்குஊது, செல்லு வோம்.

(இரு படைகளும் போர் செய்கிறது)

இந்தியவீரன் :—கத்துமுன், குத்துக. கரங்களைத் துணித்திடு.

ஒருவன் :—செத்தனர், எய்துக, சிரங்களைக் குமித்திடு.

வேறு ஒரு :—முட்டுமுர் வெட்டுக, முதுகினைப்பிளந்திடு.

வாள்வீரன் :—திட்டுமுர், வீசுக! திரள் திரள் சரித்திடு.

கிரேக்கர் :—நம்பி வந்தோம் நாமெல்லாம் அம்பு வந்து கொல் [லுதே

தும்பிக்கையில்பட்டு நாம் துடித்து மாளுகின்றனம்.

அலக் :—மானமற்ற வீரர்கள் யானையை எரியுங்கள்.

இந்தியவீரன் :—யானை பின்னடையுதே!

ஒருவன் :—.........சேனையை அழிக்குதே!

புருஷோ :—வேழம் அஞ்சி ஓடினும், வீரர் பின்னுக் கோடிடார்.

வீரர்கள் :—பாலம் அடைந்து போயினும் மீள்வதில்லை.

வேறு வீரன்............ மாள்வதே.

(இந்திய சைனியம் தோற்று, புருஷோத்மன் கைதியாகிறுன்—அலக்ஸாண்டர்முன் நிறுத்தப்படுகிறுன்.

திரை 6

அலக் :—(போரஸ்முன் நிற்கிறுன்)

எமது படையை எதிர்த்த நீ இறுதி என்ன கண்டனை?

போரஸ் :—எமது வேழம் கொல்லவே, இறுதி கண்டு நிற்கிறேம்.

அலக் :—மன்னன் என்ற பேருண்டா? இன்னும் உனக்கு வீரமா?

போரஸ் —இறந்துபட்ட வீரர் எனக்கும் என்னையன்றி அரசர் யார்?

அலக் :—எவ்விதம் உனை நடத்த எண்ணம் என்முன் சொல்லுக.

போரஸ் :—எவ்விதம் நடத்துவான் இறைவன் ஓர் இறைவனை அவ்விதம் நடத்துக.

அலக் :—.........அறம் உணர்ந்த வீர, நீர் நாடு யாவும் தந்தனம், கேடில்லாத மன்னவ! ஈடிலாத புகழுடன் இருவர் உறவு கொள்ளுவோம்.

(அலக்ஸாண்டர் போரஸுக்கு நாட்டைத் திரும்பக் கொடுத்து விடுகிறுன்—பின் தனது நாடு திரும்புகையில் அலக்சாண்டர் பாபிலோனில் சுரத்தால் சாகிறுன்.)

இருண்ட இதயம்

[கோஹினூர்]

1. அன்பு வெள்ளம்

"அண்ணு!"

"ஏண்டா!"

"அங்கே விளையாட யாராவது இருப்பார்களா?"

"தெரியாதுடா!"

"அப்படின்ணு என்னைக் கொண்டுபோய் விரகாலூரிலேயே விட்டுவிடு."

"நீ பேசாமல் வாடா."

"போண்ணு! இறக்கி விடு."

"பேசாமல் இருக்கமாட்டாய்?"

"அம்மாகிட்டே கொண்டுபோய் விடு."

"அக்காள்தான் உன்னைப் பார்க்க அதிகப் பிரியப்படுகிறதே! பேசாமல் வா. சீக்கிரம் திரும்பிவிடலாம்."

"மாட்டேன். இறக்கிவிடு."

பட்-பட்-பட்! மூன்று குட்டுகள் என் தலையில் விழுந்தது! கண்ணீரும் இரண்டு துளி சேதமாகிவிட்டது! பேசாமல் மௌனமாக அழுதுகொண்டே இருந்தேன். அண்ணன் சைகிளை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டே சென்றது. பின்னால் உட்கார்ந்திருந்த நான் இரக்கமான குரலில் "அண்ணு! நாளைக்கு திரும்பி அம்மாகிட்டே போயிடலாமா?" என்றேன். "சரிடா!" என்றார் அண்ணன். அவருடைய குரலிலிருந்து மறுவார்த்தை பேசக்கூடாது என்ற சங்கல்பம் செய்துகொண்டேன். சைகிள் விரகாலூரிலிருந்து மேட்டூருக்குப் போகும் வழியில் போய்க்கொண்டிருந்தது. ஆனால் என் மனம் விரகாலூரைவிட்டு அசையவில்லை. என்னையே நான் மறந்துவிட்டேன். "இறங்கடா!" என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். மேட்டூர் வந்துவிட்டது!

"வாங்க, வாங்க" (வாருங்கள் என்று அழைப்பதற்கு பதில் 'வாங்க' என்று சொல்வார்கள். கொச்சை தமிழ் இது. நான் அப்பொழுது ஒன்பது வயது சிறுவனானபடியால் நானும் கொச்சை தமிழிலேயே பேசினேன். ஆதலால் அப்படியே எழுதுகிறேன்) என்ற கூக்குறல்—இல்லை! இல்லை—குரல்கள் ஏககாலத்தில் எழுந்தது. அண்ணன் சிரித்துக்கொண்டே "வருகிறோம்" என்றார். நான் மிரள மிரள விழித்துக்கொண்டே நின்றேன். அக்காள் என் கையைப் பிடித்துக்கொண்டு "ஏண்டா பயப்படுகிறாய்? பயப்படாதே! உனக்கு விளையாட இங்கே ஒரு ஆள் இருக்கிறது" என்றார்கள். அப்பொழுதுதான் என் உள்ளத்தில் சற்று மகிழ்ச்சி ஏற்பட்டது. கொஞ்சம் சிரிப்புகூட வந்தது! உணர்ச்சிவேகத்தில் "விளையாட ஆள் எங்கேக்கா" என்றேன். அக்காள் அத்தானைப் பார்த்தார்கள்.—

ஒன்றும் பேசவில்லை. அந்தப்பார்வையில் என்ன அறிந்தாரோ தெரியவில்லை? ஆனால் உடனே உள்ளே ஓடினார்—மானேஜரது கட்டளையை நிறைவேற்றும் சேவகன்போல! இதற்குள் அத்தை (அத்தானின் தாயார்) சமைக்கப்போய்விட்டார்கள். அண்ணனும் வாலிப ஆசாமிகளைத் தேடிக்கொண்டு போய்விட்டார். இனம் இனத்தோடேதானே!

சற்றுநேரம் நானும் அக்காளும் இருந்தோம். "அப்பாடா!" என்று இருந்தது என் மனம். அக்காளிடம் "விளையாட ஆள் எங்கே?" என்றேன். அந்த சமயம் அங்கே அத்தான் ஒரு பொம்மையை—(அடடா!—தப்பு—தப்பு) 7 வயதுள்ள பெண்ணைக் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுவந்தார். ஆசாமியை (அந்தப் பெண்ணைத்தான்!)ப் பார்த்ததுமே அலட்டிக்கண்டுவிட்டது! ஒரு சில்க்சட்டை! அழகான பூக்கள் போடப்பட்ட பாவாடை! கையில் நான்கு வளையல்கள்! காலில் வெள்ளி கொலுசு! கழுத்தில் மெல்லிய சங்கிலி ஒன்று! இவைகளை ஒருமுறை சுற்றிப்பார்த்தேன். அந்தப் பெண் என்னைப் பார்த்தாள். இதற்குள் அத்தான் "இந்தாடா உனக்கு விளையாட ஆள்" என்றார். எனக்கு ஒரு தைரியம் ஏற்பட்டுவிட்டது! அது எப்படித்தான் ஏற்பட்டது என இன்று நிர்ணயிக்க முடியவில்லை!

நான் : இந்த பொம்மையோடவா விளையாடவேண்டும்?

அக். : ஆமாம். எல்லா விளையாட்டும் விளையாடுவாள்......

அத். : (ஏளனமாக) உன் அக்காளைப்போல!

அக். : (அத்தானைப்பார்த்து) போங்க! இந்த குறும்பு பேச்சுதான் தெரியும்!

இந்த சமயம் அவளைப் பார்த்தேன். அவள் கோபமாக என்னைப் பார்த்தாள். "நல்ல பொம்மைதான்" என்றேன் மிக மெதுவாக! அவளுக்கு இது எப்படித்தான் கேட்டதோ தெரியவில்லை. அதிக கோபமாக "அத்தாச்சி பாருங்க அவனை! பொம்மைங்கறான்!" என்று அழுதாள். அத்தாச்சி அவளைத் தூக்கிக்கொண்டு "அழாதே! கண்ணல்லவா? அழாதேம்மா!" என்று தேற்றிக்கொண்டிருந்தாள். எனக்குக் கொஞ்சம் பெருமையாக இருந்தது. "ஒரு பெண்ணை அழவைத்துவிட்டோம், நாம் சாமர்த்தியசாலி" என்று நானே என்னைப் பற்றி புகழ்ந்துகொண்டேன்! அவள் அழுவதைக் கண்டதும் இன்னும் கொஞ்சம் அவளை சண்டைக்கிழுக்க நினைத்தேன்.

நான் : அழுமூஞ்சி!

அவள் : நீதாண்டா அழுமூஞ்சி!

நான் : இப்ப யாருடி அழுகிறது?

அவள் : (அழுவதை நிறுத்திக்கொண்டு) தடியா!

நான் : தடிச்சி...

அவள் : கழுதை...

நான் : நாய்...

அக்காள் : சீ! சண்டை போடுவதை நிறுத்திக்கொண்டு இரண்டு பேரும் விளையாடுங்கள்.

நான் : அவள் முகத்தைப்பார், அவளோடவா விளையாடச்சொல்கிறாய்? அவளைப்பார்த்தாலே......

என்று கூறிமுடிக்குமுன்பே எங்களிடத்திற்கு அத்தை வந்துவிட்டார்கள். தாய் அல்லவா? மகளைப்பற்றி இழிவாகப் பேசுவதைக் கேட்கச் சகிப்பார்களா? "ஸாம்! என் மகள் பெயர் என்ன தெரியுமா? "ஜோதி"! ஞாபகமிருக்கட்டும்" என்றார்கள் அத்தை.

நான் : பெயரிலாவது ஒளி வீசுகிறதே!

அத்தை : என்னப்பா?

நான் : உங்கள் மகள் அழகாயில்லாவிட்டாலும் பெயர் கொஞ்சம் அழகாயிருக்கிறது!

அத்தை : அது போகட்டும் பெயருக்காகவாவது நீ கட்டிக் கொள்ளமாட்டாயா?

நான் ; ஜோதி! பேரைப்பாரு...பேரை. ஜோதி...ஜாதி...வீதி ...பேதி...நாதி......

ஜோதி : அவன் பேரு என்னம்மா?

அத்தை : ஸாமு.

ஜோதி : ஸாமு...காமு...ராமு...தாமு...சோமு...

அக்கா : அப்பாடா! பழி தீர்த்துக்கொண்டாயா? இனி சமாதானமாயிருங்கள்.

நான் : உனக்கு cat என்றால் அர்த்தம் தெரியுமா?

ஜோதி : (கோபமாக)......நாயி......

நான் : (பெருமையாக) சீ! நாயிங்கறத்துக்கு dog என்று சொல்லனும்.

ஜோதி : அர்த்தம் சொல்லலேடா!...உன்னைத்தான் நாய் என்றேன்.

அத்தை : வாடா—போடா என்று பேசாதம்மா!

ஜோதி : அப்படித்தான் பேசுவேன். (அக்காள் அவளைக் கீழே இறக்கிவிட்டார்) அத்தை சீ! முரட்டு கழுதை!

நான் : எனக்கு ஒருத்தர் சொல்லிக் கொடுத்தாங்க! முரட்டுக் கழுதை!...முரட்டுக்கழுதை!!...முரட்டுக்கழுதை!!!

திடீரென என்னை 'சுளீர்' என ஒரு அடி அடித்துவிட்டு தோட்டத்துப்பக்கம் ஓடிவிட்டாள்! அவள்! நானும் அவளை விரட்டிக் கொண்டே தோட்டத்துப்பக்கம் ஓடினேன்.—அக்காள்—அத்தான்—அத்தை மூவரும் எங்களைப்பற்றி கவலைப்படாமல் அவரவர்கள் தங்கள் வேலையைப்பார்க்க போய்விட்டார்கள். "அவர்கள் உள்ளம் கல்லா? ஒரு பெண் அடிக்கிறாள் பேசாமல் இருக்கிறார்களே!" என்ற எண்ணத்

துடன் நான் தோட்டத்திற்குள் வேகமாக ஓடினேன். கோபம் தாங்கமுடியவில்லை. மற்றவர்கள் என்னைத் தொடாததும் எனக்கு நல்லதாக தென்பட்டது. சுமார் 100 குட்டுகள் கொட்டுவது என்ற எண்ணத்துடன் தோட்டத்திற்குள் நுழைந்தேன் அவளைக் காணேம்!

"ஜோதி! ஜோதி!" என்று நாலைந்து முறை கூப்பிட்டுவிட்டேன். ஜோதியைக்காணேம்—அந்த காரம்தான்! ஒவ்வொரு செடிக்கடியிலும் பார்த்தேன். காணேம். கடைசியில் குப்பைக்காக சிமிட்டியில் (Cement) ஒரு தொட்டி கட்டப்பட்டிருந்தது. அதற்குள் எட்டிப் பார்த்தேன். இரு கரங்களையும் கூப்பி "டேய்! அடிக்காதேடா!" என்ருள். அவளை வெளியே இழுத்தேன். பயந்து கொண்டே வெளியே வந்து நின்ருள். "100 கொட்டு வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று எனது தீர்ப்பைக் கூறினேன். பரிதாபகரமாகப் பார்த்தாள். "டேய் கும்பிடுகிறேண்டா" என்ருள். "முடியாது" என்று சொல்லி இடதுகையால் அவள் தலைமுடியைப் பற்றிக்கொண்டு வலதுகையை ஓங்கினேன். 'பட்'. "ஜோதி!...பேரைப்பாரு... இப்ப எப்படி இருக்கிறது?" என்றேன். குட்டின் வலியை தாங்க முடியாததால் அழுதுவிட்டாள். நான் இன்னும் 99 இருக்கிறது என்றேன். அவள் பார்த்தாள்! அந்த பார்வை மிகக் கொடிய பார்வை! கொலைஞனுடைய இதயத்தையும் குத்தும் பார்வை! அவ்வளவுதான்! என் மனம் மாறிவிட்டது. "இன்னுமா என்னைக் குட்டப்போகிருய்?" என்ருள் அவள். அந்த குரலில் எவ்வளவு பயம்! "இல்லை" என்றேன், அவள் சிரித்தாள். அந்த சிரிப்பில் எவ்வளவு மகிழ்ச்சி! அது வெற்றிச் சிரிப்புதான்! ஆம். அவளது சிரிப்பே அலாதியான சிரிப்பாய் இருந்தது! வீட்டிற்குள் போகப் புறப்பட்டேன். "டேய்!" என்ருள். திரும்பி வந்தேன்.

ஜோதி: எங்கே போகிருய்?

நான்: வீட்டிற்கு.

ஜோதி: வாயேன். விளையாடலாம்!

நான்: என்ன விளையாடலாம்?

ஜோதி: வீடுகட்டி விளையாடலாம்.

நான்: சரி.

வீடு கட்டியாகிவிட்டது! சோறும் சமைக்கப்பட்டுவிட்டது! ஓடிப்போய் ஒரு பூவரசு மரத்தில் இலைகள் பறித்துக்கொண்டுவந்து "ஜோதி! உட்காரு சோறு போடுகிறேன்" என்றேன். "சீ! நீயா சோறுபோடுவது, உனக்கு விளையாடவே தெரியவில்லை. நானல்லவா சோறுபோடவேண்டும்" என்று என்னை உட்காரவைத்து சோறு பரிமாறினுள். "ஆமாம்! அம்மாதானே அப்பாவுக்கு சோறுபோடுகிருர்கள்" என்று நினைத்துக்கொண்டே சோறு சாப்பிட்டேன்!

(தொடரும்.)

189997

Reg. No. M. 1534

சங்கீதம்

தெய்வம்

[கோஹினூர்]

ஜோன்புரி-ராகம் 28] நோட் மெட்டு [ஆதி-தாளம்

மா மக மம மக	மப மக	ஸா கம
உன் னை படை த்தவர்	யா . . .	ர் இந்த
பப பத பப மப	தநி தப	மா ;
உல கை படை த்தவர்	யா . . .	ர் .
ஸ்ா ஸ்த ஸ்ா ஸ்த	ஸ்ரி ஸ்நி	தா பப
என் னைப் படை த்தவர்	யா . . .	ர் எங்கும்
பப பத பப மப	தநி தப	மா ;
எழி லைப் படை த்தவர்	யா . . .	ர் .

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்.)

2. வானில் ஒளிர்கின்ற—விண்மீன்
வரிசைபதித்தவன் யார்?
கானில் களித்தாடும்—காட்டு
விலங்கினைப் படைத்தவன் யார்?

3. வான வில் தனிலே—ஸப்த
வர்ணம் அடித்தவன் யார்?
கான கந்தனிலே—எழில் மிகு
காட்சியமைத்தவன் யார்?

4. சக்தி ஒன்றுண்டு—அதுவே
சகலரும் தொழும் தெய்வம்
பக்தி பூஜையினால்—பாரில்
பலன்கள் அடைந்துய்வோம்

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. Ty.—I, 12—10—1945.